செய்தி வெளியீடு எண். 41 நாள்: 20.01.2018

**ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டு வரைவு வார்டு மறுவரையறை பெறப்பட்ட மனுக்கள் குறித்து கீழ்கண்ட அட்டவணைப்படி மாவட்ட மறுவரையறை அலுவலர் / மாவட்ட ஆட்சியர் அவர்களால் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கம் 2-வது தளத்தில் நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள்.**

திருவள்ளூர் மாவட்டத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டு வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் பொதுமக்கள் பார்வைக்கு 27.12.2017 முதல் வெளியிடப்பட்டது.

மேற்கண்டவாறு வெளியிடப்பட்ட வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மீதான ஆட்சேபணைகள் ∴ கருத்துருக்கள் எழுத்து மூலமாக தெரிவிக்க 12.01.2018 வரை கால அவகாசம் அளிக்கப்பட்டது. மேலும், இது குறித்து 29.12.2017 அன்று மாவட்ட அளவில் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட்டது.

தற்போது 12.01.2018 வரை திருவள்ளூர் மாவட்டத்தில் வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மீது அரசியல் கட்சி பிரதிநிதிகள் / பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

அவ்வாறு பெறப்பட்ட மனுக்கள் குறித்து கீழ்கண்ட அட்டவணைப்படி மாவட்ட மறுவரையறை அலுவலர் / மாவட்ட ஆட்சியர் அவர்களால் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கம் 2-வது தளத்தில் நடைபெறவுள்ளது.

1. நகர்புறம் - நகராட்சிகள் - 22.01.2018 மு.ப. (காலை 10 மணி முதல் 12 மணி வரை)
   பேரூராட்சிகள் - 22.01.2018 பி.ப (மாலை 3 மணி முதல் 5 மணி வரை)
2. ஊரகம் - ஊரகம் - 23.01.2018

| முற்பகல் (காலை 10 மணி முதல் 1மணி வரை) | பிற்பகல் (2 மணி முதல் 5 மணி வரை) |
|---|---|
| ஊராட்சி ஒன்றியங்கள் | |
| 1. வில்லிவாக்கம் | 1. திருத்தணி |
| 2. புழல் | 2. பள்ளிப்பட்டு |
| 3. சோழவரம் | 3. இரா.கி.பேட்டை |
| 4. மீஞ்சூர் | 4. திருவள்ளூர் |
| 5. கும்மிடிப்பூண்டி | 5. எல்லாபுரம் |
| 6. பூவிருந்தவல்லி | 6. கடம்பத்தூர் |
| 7. பூண்டி | 7. திருவாலங்காடு |

மேற்கண்ட கூட்டத்தில் ஏற்கனவே எழுத்து மூலமாக மனுக்கள் அளித்த அரசியல் கட்சி பிரதிநிதிகள் / பொதுமக்கள் மட்டும் கலந்துக்கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

மேலும், 24.01.2018 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர் நகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் தமிழ்நாடு மாநில மறுவரையறை ஆணையத்தால் மண்டல அளவிலான கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் ஏற்கனவே எழுத்து மூலமாக மனுக்கள் அளித்த அரசியல் கட்சி பிரதிநிதிகள் / பொதுமக்கள் மட்டும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்கள் தெரிவிக்கலாம்.

மேற்கண்ட கூட்டத்தில் புதிய ஆட்சேபணைகள் குறித்த மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**